# நவராத்திரி விழா:

- நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவு என்பது பொருள், புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் இரவில் மூன்று பராசக்தியை பலவடிவாகப் பூசித்து விழா நடத்தி வருகின்றனர்.
- முதன் மூன்று நாட்களில் பார்வதி தேவியையும், நடு மூன்று நாட்களில் இலட்சுமி தேவியையும், இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதி தேவியையும் முறையே பூஜித்து, பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.
- வடநாட்டிலும், தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது.
- தசராத்திரி அல்லது பத்து இரவுகள் விழா நடந்து வருவதால் இதனை தசரா எனச் சிலர் கூறுகின்றனர்.
- முன்னொரு காலத்தில் மகிடாசுரன் என்ற ஓர் அரக்கன் பராசக்தியின் அருளால் சத்துருவின் பலத்தை அருந்தும் வலிமையையும், பல சாம்ராஜ்யங்களை அடக்கி ஆளும் சக்தியையும் பெற்று, நல்லோர்கள் பலருக்கு நலிவுகள் பல செய்துவந்தான். அதனைப் பொறுக்க முடியாத தேவர்கள், நாரத முனிவரின் உபதேசத்தால் பார்வதி தேவியை நோக்கித் தவமாற்றினார். இவர்களின் பாதுகாப்பின் பொருட்டுச் சக்தியின் அருளால் ஒரு மாயைக் கோட்டை தோன்றியது.
- அதனுள்ளே எவராலும் புகமுடியாது. அசுரன் இதை அறிந்து தேவர்களைக் கொல்லக் கோட்டை வாயிலைக் குறுகினான்.
- கோட்டையை உடைக்கவோ, கோட்டையின் உள் புகவோ முடியாது போய்விட்டான்.
- தேவர்கள் இக்கோட்டையை அசுரனே அமைத்தனன் என நினைத்து வருந்தினர்.
- பின் தேவியை நோக்கித் தவம்புரிய, தவச்சாலையில் உள்ள யாககுண்டத்தில் தேவி லலிதையெனும் காமேசுவரியாகத்

தோன்றிய தேவர்களது இடுக்கண்களை அகற்றுவதாகக் கூறி அருள்புரிந்தாள்.

- அந்த லலிதையை காமேசுவரராகிய பரமேசுவரன் திருமணம் செய்து கொண்டார்.
- அவருடைய அனுமதியோடு அவள் அஸ்த்ரம் முதலியன பெற்றுக் போருக்குப் புறப்பட்டாள்.
- அசுரனது தம்பியர் விசுக்ரன், வடங்கன் என்பவர்கள் வந்து எதிர்த்தனர்.
- தேவி தன்னிடத்தில் தோன்றிய துர்கையை அனுப்ப அவள் அவர்கள் இருவரையும் விழுங்கினள் அதன் பின் லலிதாதேவி எதிர்த்த மகிடாசுரனை சங்கரித்துத் தேவர்களது இடுக்கண்களை அகற்றினாள்.
- இந்நிகழ்ச்சியே நவராத்திரி ஆகுமெனத் தேவிபாகவதம் கூறுகின்றது.
- முதல் மூன்று நாள் மலைமகள் அல்லது பார்வதி ஆராதனை நடைபெறும்.
- பார்வதி அருள் வடிவம், “அருளத சத்தியாகும் அரன் தனக்கு”, அவள் ஞானசொரூபி, பச்சைநிற வடிவினள், கண்கோட்டம் ஈகை, அன்பு, ஒப்புரவு முதலியவை அமைந்தவள். அவள் ஞான வடிவினள்.
- ”சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்.
- இவளது நிறம் பச்சை அல்லது நீலமாகும்.
- இது வளமையையும் செழுமையையும் குறிக்கும்.
- அவளது அருளும் அனுக்கிரகமும் பெறும் குறிக்கோளுடனே நவராத்திரியில் முதல் மூன்று நாளும் பராசக்தியைப் பூஜிக்கின்றோம்.
- இலட்சுமி சிவப்பு அல்லது பொன்னிற வடிவினள் இதனை, ”திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்” என்ற பேயாழ்வார் வாக்கால் அறியலாம்.
- சிவப்பு நிறம் அழகு,.

- செம்மை, தியாகம் முதலியவற்றைக் குறிக்கும் செல்வத்துக்கு இலட்சுமி அதிதேவதை இவ்வுலக வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது. ”பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை.”
- இம்மைக்கும், அம்மைக்கும் பொருள் இன்றியமையாதது.
- இதனாலேயே இறைவனை ”திருவேயென் செல்வமே எனவும், “ஒண்பொருளும் நீ,”. ”இப்பொன் நீ”, ”இம்மணி நீ” ”இம்முத்து நீ”, எனவும் ஆன்றோர் கூறினர்.
- ஆதலால் பொருள் வளர்ச்சி நோக்குடன் விவசாயிகள், வியாபாரிகள் தொழிலாளர்கள் அனைவரும் நவராத்திரியில் நடுநின்ற மூன்று நாட்களில் இலட்சுமி தேவியைப் பூஜிக்கின்றனர்.
- இறுதி மூன்று நாட்களில் கலைமகளைப் பூஜிக்கின்றனர்.
- இவள் வெள்ளைக் கலையடுத்தி வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்”.
- வெள்ளை நிறம் மாசின்மை, வாய்மை, தூய்மை முதலிய அருங்குணங்களைக் குறிக்கிறது.
- இவள் கலைகள் அனைத்துக்கும் அதிதேவதையாவள்.
- இதனை,”ஆயகலைகள் அறுபத்து நான்கினையும். ஏய உணர்விக்கும் என்னம்மை” என்பதால் அறியலாம்.
- அவள் படிகம் போன்ற நிறத்தினள், பவளச் செவ்வாயினள்.
- இவை அனைத்தும் பரிசுத்தத்தின் அறிகுறியாகும்.
- நமது முன்னோர்கள் கலைகளைக் கடவுள் தன்மையுடையனவாகக் கருதி வழிபட்டு வந்தனர்.
- தாங்கள் பெற்ற கலைகளின் திறத்தை நவராத்திரி விழாவில் அரசர், அமைச்சர், அறிஞர், செல்வந்தர்கள் கூடிய அவைக்களத்தில் பல்லோரும் வியக்கக்காட்டிப் பரிசு பெற்றுவந்தனர்.
- ஞானவளர்ச்சியை விரும்புவோர் கலைமகள் விழாவைக் கொண்டாடுவர்.
- புதிய கலைகளைப் பத்தாம் நாள் விஜயதசமியன்று தொடங்கிப் பயில ஆரம்பிப்பர்.

- பள்ளிக்கு வைத்தல் முதல் பரமயோக ஞானக்கலைகள் வரை பயிலத் தொடங்குவது விஜயதசமி நாளேயாகும்.
- விஜயதசமி விழாவில் அரசர்கள் தங்கள் நான்கு வகைப் படையுடனும் நானில மக்களுடனும் போர்க்கோலம் பூண்டு நகர்புறம் புறப்பட்டுச் சென்று அம்பு எய்து, வெற்றி முழக்கத்துடன் திரும்புவர்.
- ஆலயங்களில் அன்று பிரதான மூர்த்தியைக் குதிரை வாகனத்தில் ஏற்றி அம்போடும் இடத்திற்குக் கொண்டு சென்று அம்பெய்து, வெற்றிப் பிரதாபத்துடன் ஆலயத்திற்கு மீளக்கொணர்வர்.
- நவராத்திரி விழாவை நன்கு கொண்டாடுவதன் பயனை,

> "கன்னி மதியின் வரையுயிர்த்த கன்னி மகிழப் பேரன்பால் மன்னு நவராத்திரி பூசை மரபினியற்று முறைமையோர் நன்னருலகம் பணிகேட்ப நவைதீர் செல்வத்திடை மூழ்கி முன்னுங்கதி இனிதுறீஇ முடிவிலின்பம் நுகர்வரால்"

எனும் பாடலால் அறியலாம்

## கந்தவிரத விழாக்கள்:

- கலியுகவரதனாகிய கந்தக் கடவுளை நினைத்து தவமாற்று வதற்குரிய விரதங்கள் மூன்று ஆகும்.
- அவை வாரவிரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் எனப்படும்
- வாரவிரதம் வெள்ளி நாள் விரதமும், நட்சத்திர விரதம் கார்த்திகை விரதமும், திதி விரதம் கந்தசஷ்டி விரதமும் ஆகும்.

### 1. வாரவிரதம் (வெள்ளி விரதம்):

> "வெள்ளிநாள் விரதந்தானே விண்ணவர் உலகைக் காத்த
> வள்ளல்தன் விரதமாகம் மற்றது புரிந்த மேலோர்
> உள்ளமேல் நினைந்த வெல்லாம் ஒல்லையின்
> முடியும்மன்றே"

காணும் கந்தபுராணச் செய்யுளால் வெள்ளிநாள் விரதத்தை முறைப்படி ஆற்றிவருபவர் உள்ளத்தில் நினைந்தவெல்லாம் விரைவில் நிறைவேறப் பெறுவர் என்பதை நன்கறியலாம்.

## 2. நட்சத்திர விரதம்:

- மாதந்தோறும் வரும் கிருத்திகை நட்சத்தரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுதல் கிருத்திகை விரதமெனப்படும்.
- சூரன் முதலிய அரக்கர்களின் கொடுமைக்கு அஞ்சிய தேவர்கள் கைலாயம் சென்று பரமேசுவரனிடம் முறையிட தனது ஐந்து முகத்தோடு அதோ முகமும்கொண்டு திருமுகங்கள் ஆறாகிய ஆறுநெற்றிக் கண்ணிலிருந்தும் ஆறு தீப்பிழம்புகளை வெளிப்படுத்தினன்.
- அதனை வாயு அக்கினியிடம் சேர்க்க, அக்கினி கங்கையிலிட, கங்கை சரவணத்தில் கொண்டு சேர்க்க, அப்பிழம்புகள் ஆறுமுகமும், பன்னிரண்டு கரங்களும், ஒரு திருமேனியும் உடைய முருகனாய் அமைந்தது. சரவணம் என்பது நாணற்காட்டைக் குறிக்கும்.
- சரவணபவன் என்பதற்கு நாணற்புல் நிறைந்த தடாகத்தில் தோன்றினவன் என்பது பொருள் ”சர” என்பது இருபத்தைந்து எனும் எண்ணைக் குறிக்கும் என்பவர்.
- இருபத்தைந்து தத்துவங்களின் கூட்டமாகிய பிரபஞ்சமே சரவணமாகும்.
- முருகன் அப்பிரபஞ்சத்திற்கு நாயகனாய் அமர்தல் சரவணத்தடாகத் தோற்றம் விளக்குகிறது.
- முருகனது தோற்றத்தைக் கண்ட தேவர்கள் கார்த்திகை மாதரை அழைத்து அவனுக்குப் பாலூட்டி உபசரிக்கும்படிக் கட்டளையிட்டனர்.

- கார்த்திகைப் பெண்களும் ஆவலோடு சரவணம் வந்து சண்முகனைக் கண்டு வியப்பெய்தி ஆறுமுகம்கொண்ட குழந்தைக்கு எவ்வாறு பாலூட்டுவது என்பதனை அறியாமல் மயங்கி, தங்களிடம் பால் அருந்துமாறு முருகனை வேண்டிக் கொண்டனர்.
- ”உறுநர்கள் தமக்கு வேண்டிற்றுதவுவோன் ஆதலாலே, அறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார் வடிவம்கொண்டான்”.
- இதைக்கண்ட கார்த்திகைப் பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழந்தைக்குப் பாலூட்டி உபசரித்தனர்.
- அக்கார்த்திகை மாதரின் நாளாகிய கிருத்திகையில் முருகன் தோன்றினதால் “கார்த்திகேயன்” எனும் நாமத்தைக் கொண்டதோடு அந்நாளில் தம்மை வழிபடுவோர்க்கு எல்லாவித நன்மைகளும் பெருகும் எனவும் அருள் புரிந்தான்.

3. <u>திதிவிரதம் (கந்தசஷ்டி விரதம்):</u>

- காசிப முனிவனுக்கும் மாயையெனும் அரக்கிக்கும் புதல்வர்களாய்ப் பிறந்த சூரன், சிங்கமுகன், தாரகன் எனும் அசுரர்கள் கடுந்தவம் புரிந்து சிவபெருமானிடம் வரங்கள் பெற்று வீரமகேந்திரம், ஆஸரபுரி, மாயாபுரி எனும் இடங்களில் வாழ்ந்து வந்தனர்.
- அவர்கள் தேவர்கள் முதலிய நல்லோர்களுக்குப் பலவிதத் தீங்குகளை வரபலத்தால் செய்து வந்தனர்.
- அவர்களை அழிக்க யாவராலும் முடியாது போயிற்று.
- தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவன் முருகனாய்த் தோன்றி அவனோடு ஆறுநாட்கள் அமர்தொடுத்தனன்.
- அந்த ஆறு நாட்களும் தேவர்கள் முதலிய அனைவரும் உணவு அருந்தாமல் முருகனையே தியானம் செய்துவந்தனர்.
- சூரனது தம்பியரும் தனையர்களும் முருகன் சேனையால் அழிந்தும், சூரன் ஆணவ மல முதிர்ச்சியோடு முருகனை எதிர்த்து நின்று அமர்புரிந்தான்.

- அவ்வமரில் அவனது ஆணவ மலம் சிறிது அகன்றது அப்போது அவன் முருகன் உருவில் ஈடுபட்டான் முருகன் தன்னிடம் யுத்தத்திற்கு வந்தது அருளேயாகுமெனத் தெளிந்தான் இதனை,

"அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின்காறும் எண்ணிலா ஊழிகாலம் எத்திற நோக்கினாலும் கண்ணினால் அடங்காதுன்னிற் கருத்தினால் அடங்கா தென்பான் நண்ணினான் அமருக்கென்கை அருளென நாட்டலாமே"

எனும் செய்யுளால் அறியலாம்.

- முருகனை வழிபட அவனது உறுப்புக்கள் அனைத்தும் விரும்பின. எனினும் மானம் அவனைத் தடுத்தது.
- இதனை

"குழுதல் வேண்டுந்தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந்தாலும் ஆழுதல் வேண்டுந் தீமையகன்று நானிவற்கு ஆளாகி வாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மானமொன்றே"

எனும் பாடலால் அறியலாம்.

- சூரன் ஒரு சுத்த வீரன். போருக்கு எண்ணித் துணிந்தான். வாழ்வு அல்லது சாவு என முடிவுகட்டினான்.
- தன் ஆற்றல் அனைத்தையும் காட்ட ஆரம்பித்தான். ஒரு மாமர வடிவைக் கொண்டான்.

"வன்னியின் அலங்கல் கான்று வான்தழை புகையினல்கிப் பொன்னென இணர்கள் ஈன்று மரகதம் புரையக் காய்த்துச் செந்நிற மணிகள் என்னத் தீம்பழங் கொண்டு கார்போல் துன்னு பல்கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்"

- தீ போன்ற தளிர்களையும், புகைபோன்ற தழைகளையும், பொன் போன்ற பூங்கொத்துக்களையும், மரகதம் போன்ற காய்களையும், செம்மணிபோன்ற பழங்களையும், கார்போன்ற கிளைகளையும் உடைய ஒரு மாமரமாகி சூரன் கடலினுள் மறைந்து நின்றான்.
- இதனை அறிந்த முருகன் அவனைக் கொல்ல வேலாயுதத்தை விடுத்தான். வேல் சென்று அவன் மீது பாய்ந்து அவனை இருகூறாக்கியது. எனினும் அவன் இறக்கவில்லை. அது அவனது தவத்தின் வலிமையாகும்
- இதனை,

> ”ஆடல்வே வெறிதலோடும் ஆமிர வடிவாய் அண்ட கூடமு
> மலைத்தகள்வன் அரற்றோடு குறைந்து வீழ்ந்தும் வீடிலன்
> என்ப மன்னோ மேலைநாள் வரத்தின் என்றால் பீடுறு
> தவமேயன்றி வலியது பிறிதொன் றுண்டோ”

எனும் கவியால் உணரலாம்.

- பின்னர் சூரன் சேவலும் மயிலுமாகி முருகனை எதிர்த்தான். அவன்மீது முருகனது அருட் கண்ணோட்டம் விழுந்தது.
- கரும்பொன் செம்பொன் ஆகியதுபோல மாறினான் முருகனது அருளுக்கு இலக்கானான்.
- முருகன் சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டான். இச்செய்கைகளிலிருந்து.

> ”தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுனுற்றால்,
> தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்”

- சூரனை அவனது கிளையுடன் அழித்து அருள்புரிந்த முருகனை தேவர்கள் முதலியோர் அமர் நடந்த ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறு தினங்களும் வாழ்த்தி வணங்கினார்கள்.

"வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற்செங்கை அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாருந் சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந்தன்னில் முற்பகலாதியாக மூவிரு வைகல் நோற்றார்"

- துலையின் திங்கள்-ஐப்பசி மாதம், மூவிரு வைகல் -ஆறுநாட்கள் அம்முறையே நாமும் ஐப்பசி மாதம் அமாவாசை கழிந்த ஆறு நாட்களிலும் சஷ்டிவிரதம் இருந்து ஆறுமுகக் கடவுளை வழிபட்டு வருகின்றோம்.

## சஷ்டி நோன்புமுறை

- இந்த ஆறு நாட்களிலும் காலையில் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை கட்டி இரவினில் தம்பம், விம்பம், கும்பங்களில் முருகனைப் பூஜித்து, வெல்லம் சேர்த்து நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்து பிற உபசாரங்களையும் செய்து, கந்தபுராணம் ஆதியோடந்தமாகப் படித்து உபவாசத்தோடு தியானித்துச் சூரசங்காரத்தைத் திருவிழாவாக கொண்டாட வேண்டும். ஏழாம் நாள் அடியார்களுக்கு அன்னமளித்து பாரணம் செய்து வந்தால் எல்லாவித நலன்களும் பெற்று வாழலாம் முசுகுந்தன் என்பவன் கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்டு உலகத்திற்கே அதிபதியானான்.

## விழாத் தத்துவம்

- முருகன் பதியையும், தேவர்கள் பசுக்களையும், சூரன் அகங்காரத்தையும், சிங்கமுகன் குரோதத்தையும், தாரகன் மோகத்தையும், கஜமுகி சஞ்சலத்தையும் உணர்த்துகின்றனர்.
- பானுகோபன் அகங்காரத்தில் தோன்றிய துர்க்குணத்தையும், அதிசூரன் முதலிய மக்கள் குரோத மோகத்தால் தோன்றும் காரியங்களையும் நிகர்ப்பர்.

- மாயாபுரி தூல சரீரத்தையும், ஆஸரபுரி சூட்சம சரீரத்தையும், வீரமகேந்திரம் காரண சரீரத்தையும் நிகர்க்கும்.
- பாசம் இறைவனை அணுகாது உயிர்களையே தளைந்து நிற்கும்.
- ஆணவ மலம் போன்ற சூரனது ஆடாத செயல்கள் பசுக்களாகிய தேவர்களையே துன்புறுத்தின.
- ஆணவ மலம் முத்தியிலும் அழியாது வலுக்குறைந்து நிற்கும் என்பதை சூரன் முற்றும் அழியாது மயிலாய் மாறி நின்றது உணர்த்தும்.
- இந்நிகழ்ச்சிகளையும் தத்துவங்களையும் உணர்ந்து கொள்ளவே ஆண்டுக்கு ஒருமுறை கந்தசஷ்டி விழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## திருக்கார்த்திகை விளக்கீடு விழா

- கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வருவதால் அம்மாதம் காரத்திகை எனப் பெயர்பெற்றது. கார்த்திகை மீன் (மீன்-நட்சத்திரம்) ஆரல். இறால், அறுவாய், அளக்கர் எனவும் பெயர் பெறும்.
- அறுமீன் என இதற்கு ஒரு பெயர் உண்டு.
- ஆறு உடுக்கள் (உடுக்கள் - நட்சத்திரங்கள்) ஒரே கூட்டமாகக் கூடியிருப்பதால் அது இப்பெயர் பெற்றது.
- சூரியன் கார்த்திகை நட்சத்திரத்தைக் குறுகும்பொழுது அக்கினி நட்சத்திரம் ஆரம்பமாகும்.
- கார்த்திகை நாளில் வரிசை வரிசையாகத் திருவிளக்கேற்றி எங்கும்
  கொண்டாடும் வழக்கம் மிகப்புராதன காலந்தொட்டு இருந்து வருகிறது. களவழி நூல்,"கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே" எனக் கூறுகின்றது. சாற்றில்; சாறு- விழா.

"துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த்திகை நாள் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

- கார்த்திகை நாளில் மலையில் விளக்கிடுவதைச் சிந்தாமணியில், ”குன்றில் கார்த்திகை விளக்கிட்டன்ன” எனக் கூறும் பகுதியால் அறியலாம்.
- கார்த்திகை விழாவைப் பற்றிப் பலர் பற்பலவிதமாகக் கூறுகின்றனர். ஆயினும் கார்த்திகை விழாவின் உண்மைக் கருத்தினை ஆராய்வாம்.
- மண், நீர், அனல் (தீ), அநிலம் (காற்று), வான் சூரியன் சந்திரன், ஆன்மா எனும் அட்டமூர்த்தங்களாய் இறைவன் விளங்குகிறான்.
- அட்ட மூர்த்தங்களில் அக்கினி, சூரியன், சந்திரன், ஆன்மா எனும் நான்கும் தீயின் அம்சமாகும். இறைவன் அழல் உருவினன் என்பதை,

  ”பாசுபதா பரஞ்சுடரே” (தேவாரம்)
  ”தழலுருவாம் சங்கரன்” (தேவாரம்)
  ”எரியலால் உருவமில்லை (தேவாரம்)
  ”சோதியே சுடரே” (திருவாசகம்)
  ”அலகிற் சோதியன்” (பெரிய புராணம்)

  எனும் வாக்குகளால் அறியலாம்.
- தீ அதனை அடைந்த பொருள்களின் அழுக்கைப் போக்கித் தன் மயமாக்கும். அதுபோல,இறைவன் உயிர்களின் ஆணவ அழுக்கை அகற்றித் தன்மயமாக்குவான்.
- தீ ஒன்றைப் பற்றி நின்று தோன்றுவதைப் போல இறைவனும் சிவஞானிகளின் அறிவில் தோன்றி விளங்குகிறான்.
- ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகளை ஏற்றுவதைப் போல சிவத்திடமிருந்து பலவடிவங்கள் தோன்றுகின்றன.
- சிவமாகிய ஒளியை யோக நிலையாலேயே காணலாம். இது எல்லோருக்கும் எளிதான காரியமல்ல.
- அதனால் சரியையெனும் தாஸமார்க்கத்தில் ”தீதில் திருவிளக்கிட்டு” என சித்தியாரிலும், ”விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்” எனத் தேவாரத்திலும் கூறுமாறு அநேக அடியார்கள் ஆலயங்களில் திருவிளக்கிட்டுப் பேறு பெற்றுள்ளார்கள்.

- யோக நெறியால் அன்றிக் காணமுடியாத தெய்வஒளியைக் கார்த்திகை நாளில் பலவித எரிகளை சிவ, விஷ்ணு ஆலயங்களின் முன் உண்டு பண்ணி அடியார்கள் அதனை இறைவனாகக் கருதி வழிபட்டு வருகின்றனர்.
- இறைவனும் அதனையேற்று அருள்புரிகின்றான். இந்த அழல் வழிபாடு தரிசனம் திருவண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது.
- அன்று அண்ணாமலை அழற் சோதிமலையாய், அருணாசலமாய், சோணகிரியாய் இலங்கும். (அருணம், சோணம் . சிவப்பு நிறம்) இம்மலை ஏறத்தாழ மூவாயிரம் அடி உயரத்தில் உள்ளது.
- கார்த்திகை அன்று மலைமேல் பெரிய பாத்திரம் ஒன்றில் நெய் பெய்து, துணியிட்டு, கற்பூரத்தை ஏராளமாகச் சொரிந்து விளக்கிடுவர்.
- பல மைல்களுக்கு அப்பால் பல நாட்கள் இச்சோதி ஒளிவீசும். இம்மலையை அடுத்த இடங்களில் உள்ள ஆவினங்கள் சிவப்புநிறம் பொருந்தியனவாகவே காணப்படுகின்றன.
- தீபம் ஏற்றி வழிபட முடியாத இடங்களில் சிவ, விஷ்ணு ஆலயங்களின் முன்னர் பனை ஓலையால் சொக்கப்பனை வேய்ந்து சுவாமியை எழுந்தருளப் பண்ணிச் சொக்கப்பனையைக் கொளுத்துவர்.
- சொக்கப்பனை ஏக ஜோதி மயமாய் ஒளிவடிவினனாகிய இறைவனை உணர்த்தும் சொக்கப்பனை வணங்குவது சொக்கப் பனையாகும்.
- சொக்கப்பனாகிய சிவனை ஒளி வடிவாகக் காண்பிப்பதால் இது சொக்கப்பனை எனப் பெயர்பெற்றது.
- பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில், ”வேலின் நோக்கிய விளக்க நிலையும்” என்பதற்குக் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்பது பொருள்.
- ஆகவே, மேற்கூறியதிலிருந்து கார்த்திகை விழா நமது ஆணவ இருளைப் போக்கி ஞானஒளியைப் பெருக்குவதற்கு உகந்த விழாவாகும் என்பது விளங்குகிறது.

## திருவாதிரைத் திருவிழா

- மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இவ்விழா கொண்டாடப் பெறுகிறது.
- “திரு” எனும் அடைமொழி சேர்ந்த நட்சத்திரங்கள் திருவாதிரையும். திருவோணமுமாகும்.
- திருவாதிரை சிவபெருமானுக்கும், திருவோணம் நாராயணனுக்கும் உகந்த நன்னாளாகும். மாதங்களில் மார்கழி மாதம் சிறந்ததாகும் கண்ணபிரான் கீதையில், ”மாதங்களில் நான் மார்கழி மாதமாயிருக்கிறேன்” என கூறுகிறார்.
- இந்த மாதம் தேவர்களுக்கு விடியற்காலை வேளையாகும். மார்கழி மாதத்தில் பௌர்ணமியை ஒட்டித் திருவாதிரை நட்சத்திரம் வருகின்றது.
- இந்தத் திருவாதிரையில் நடராஜரை வழிபட வேண்டுமென்று காரணாகமம் கூறுகிறது.
- சிவபெருமானையே ஆதிரையன் எனக் கூறுவர். கார்த்திகை விழாவுக்குத் திருவண்ணாமலை சிறந்த இடமாய் விளங்குவதுபோல மார்கழித் திருவாதிரைக்குச் சிதம்பரம் சிறந்த இடமாய்த் திகழ்கிறது.
- திருப்பெருந்துறை என்ற ஆவுடையார் கோவிலிலும், இவ்வுற்சவம் நடைபெற்று வருகிறது.
- இறைவனின் திருக்கூத்தின் பெருமைகளை முன்னர் கூறியுள்ளோம்.
- திரு + ஆ+ திரை= திருவாதிரை. திருவென்பது அடைமொழி.
  ஆ - ஆன்மா திரை - மறைத்தல்.
- ஆன்மாவை மறைத்தல் என்பது பொருள். செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்றவாறு இன்பதுன்பங்களை இறைவன் ஊட்டும் திரோபவச் செயலை இது உணர்த்துகின்றது.

## திருவாதிரைத் திருவிழா நடைமுறை

- கொடியேற்றத்தன்று மாணிக்கவாசகரை எழுந்தருளப் பண்ணி அபிடேகம், அலங்காரம், நிவேதனம் முதலியன முறைப்படி செய்வித்துத் திருவெம்பாவை இருபது பாடல்களையும் ஓதி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தீபாராதனை எடுக்க வேண்டும்.
- தேவாரம் முதலிய இதர திருமுறைகளுக்குத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவையையே ஓதுவர் திருவிழாத் தத்துவத்தில் முன்பு கூறியபடி பத்து நாள் விழாக்களையும் நடத்த வேண்டும்.
- திருவாதிரை நாளில் நடராஜப் பெருமானுக்கு மிகச்சிறப்பாக அபிடேகம் நடைபெறும் மார்கழித் திருவாதிரையன்று சித்திரை ஓணம், ஆனி உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் சுக்கிலபட்ச சதுர்த்தி திதிகளிலும் அபிடேகம் சிறப்பாக நடைபெறும் இந்த விதமாக ஆறு சிறந்த அபிடேகங்கள் நடராஜப் பெருமானுக்கு நடைபெறுவது உண்டு.
- மார்கழித் திருவாதிரையில் உமையம்மையார் கண்டு மகிழ இறைவன் திருக்கூத்தாடினதால் நாமும் அந்நாளில் கூத்தன் தரிசனம் கண்டு குதூகலிக்கின்றோம்.

## வைகுண்ட ஏகாதசி விரத விழா

- மார்கழி மாதத்தில் வரும் சுக்லபட்ச ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி என்பா்.
- விஷ்ணுவாலயங்களில், முக்கியமாக ஸ்ரீரங்கத்தில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்,
- திருமாலடியார்கள் அன்று உபவாசம் இருந்து இறைவனை வணங்குவர்.
- இம்மாதத்தில் ஆண்டாளின் திருப்பாவையை அனைவரும் பாடி மகிழ்வர்.

## தைப்பூசத் திருவிழா

- தைமாத பௌர்ணமியன்று பூசநட்சத்திரத்தில் இவ்விழா கொண்டாடப்பெறும், திருவிடைமருதூர், மதுரை முதலிய தலங்களில் இவ்விழா நடைபெறுகிறது.
- திருவிடைமருதூர் தேவாரத்தில் இவ்விழாவைப் பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு ஒன்று எடுத்துக்காட்டப்படும்.

”பூசம் புகுந்தாடிப் பொலிந் தழகாய
ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ”

- இவ்விழாவைப் பற்றிச் சம்பந்தர் பூம்பாவையை எழுப்பிய பதிகத்தில், ”தைப்பூசங் காணாதே போதியோ” எனப் பாடுகின்றார்.

## சிவராத்திரி விரத விழா

- சிவராத்திரி விழா மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தியில் நடைபெறும் விரத விழாவாகும்.
- அன்று சிவாலயங்களில் இரவு நான்கு கால பூஜைகள் நடைபெறும்.
- அன்று கண்விழித்துப் பகலும் இரவும் உபவாசமிருப்பர்.
- இவ்விழாவை விழாநிசி (இன்பராத்திரி) பிரம சொரூபம். மகாதபசு, பிரகாசம், யசஸு, சகல புவனம், சத்தியம் எனவும் கூறுவர்.
- திரயோதசி திதியானது அம்பிகையின் வடிவமாகும்.
- சதுர்த்தசி திதி சிவஸ்வரூபமாகும். அந்தத் திரயோதசி, சதுர்த்தசி இரண்டினுடைய சேர்க்கையானது, சிவயோகத்தைக் குறிக்கிறதென சுப்பிரபேதாகமம் கூறுகிறது.
- சிவராத்திரி என்பது மக்கள் தினந்தோறும் தூங்குகின்ற இரவன்று அவ்வுயிர்வர்க்கங்கள் தீவினை காரணமாகப் பாதாளத்தில் கிடந்துழலும் நரக இருவுமன்று, தேவர்களது தட்சிணாயன இரவுமன்று, பின் யாதோ எனின், மாட்சிமையுள்ள

பஞ்சபூதங்களையும் முறையே மாயையில் ஒடுக்கி அனைவரும் இல்லாதபடி சங்கரிக்கும் ஒரு நாளாகும். இதனை மாசங்காரம் என்பார்.

- இதனை. ”மாணில முதலா ஐந்தும் மாயையில் முறை யொடுக்கி” என்பதால் உணரலாம்.
- எல்லா உலகையும் ஒடுக்கி மாசங்காரம் செய்த மகாருத்திரா் அவ்விடத்தும் தூங்காதவராய் நர்த்தனம் செய்வார்.
- அதனை சிவகாமி அம்மையார் உயிர்களின் மீது வைத்த கருணையால் கண்டு அவ்விறைவனை பூசிப்பாள்.
- இப்பூசையே சிவராத்திரி பூசையாகும். இதனை இந்நூலில் உலகத்தோற்றம் எனும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.
- சச்சிதானந்த சொரூபியாகிய பரமசிவம் ஞானசக்தியாகிய உமையோடு ஒன்றி நின்று திரும்பவும் உலகை சிருட்டி செய்யத் தொடங்கினான்.
- உலகம்மையின் பூஜையை ஏற்று உயிர்களுக்குத் தனு, கரண, புவன, யோகங்களை அளித்தான்.
- அதன் பின் அவ்விரதத்தைத் தேவர்களும், முனிவர்களும், பத்தரும், சித்தரும், முத்தரும் மேற்கொள்ளலாயினா்.
- சிவராத்திரியில் திருவருள் பெறத்தக்கோர், ஆகமங்களை ஆராய்ந்து, அவற்றில் சொல்லியருளிய பூசையை அன்பினாலே செய்ய வேண்டி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் சிறந்து விளங்கும் தலத்தை அடைந்து அங்கே வீற்றிருந்தருளுகின்ற மூர்த்தியைத் தரிசித்து,

  உபவாசமிருந்து வழிபடக்கடவர், ஒவ்வொரு யாமத்திலும் நீராடி நிறைந்த அன்புடன் அடியிற் கூறுமாறு பூசிக்க வேண்டும்.

------****-----****----